**செய்தி வெளியீடு எண்: 565** **நாள்: 23.08.2018**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (23.8.2018) பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டை நினைவுகூறும் வண்ணம், சென்னை, காமராஜர் சாலையில் உள்ள பொதுப்பணித் துறை அலுவலகத்தின் அருகில் 2 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு வளைவிற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

தமிழ் மக்களுக்காக உழைத்து, மக்கள் மனங்களில் நீங்கா இடம் பெற்ற, மக்கள் போற்றும் மகத்தான தலைவராக விளங்கிய மாண்புமிகு பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் உயரிய லட்சியத்தினையும், சிறப்பினையும் நினைவுகூறும் வண்ணம் பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்ஜி.ஆர் நூற்றாண்டு விழா, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்களின் ஆணையின்படி தமிழகம் முழுவதும் வெகு விமர்சையாக கொண்டாடப்பட்டது. இவ்விழாவானது, 30.6.2017 அன்று மதுரையில் தொடங்கப்பட்டு, 31.12.2017 அன்று திண்டுக்கல்லில் நிறைவு பெற்றது.

பொன்மனச் செம்மல், மக்கள் திலகம், வள்ளல் பெருமான் என்றெல்லாம் மக்களால் போற்றிப் புகழப்பட்ட மறைந்த முன்னாள் முதலமைச்சர் பாரத ரத்னா புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களது நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, சென்னையில் அவரின் நினைவாக நூற்றாண்டு விழா நினைவு வளைவு அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் கடந்த 28.6.2017 அன்று சட்டப்பேரவையில் அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் திரு. ப. தனபால் அவர்கள் தலைமையில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் முன்னிலையில் இன்று நடைபெற்ற பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர்

எம்.ஜி.ஆர் நூற்றாண்டு வளைவு அடிக்கல் நாட்டு விழாவில், சென்னை, காமராஜர் சாலையில் உள்ள பொதுப்பணித் துறை அலுவலகத்தின் அருகில், 2 கோடியே 52 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படவுள்ள பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் நூற்றாண்டு வளைவிற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அடிக்கல் நாட்டினார்கள். இந்த வளைவு அழகிய கலைநயத்துடன் கூடிய சிற்ப வேலைப்பாடுகளுடன் சுமார் 66 அடி அகலமும் 52 அடி உயரமும் கொண்டதாக அமைக்கப்படவுள்ளது.

இந்த விழாவில், மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத்தலைவர்கள், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., அரசு உயர் அலுவலர்கள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**